# 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 10/1999)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Acquisition of Land for Industrial Purpose Act, 1997

## (Tamil Nadu Act No. 10 of 1999)

(as on 31st October, 2023)


**தமிழாக்கம் :**

**மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**

**சென்னை**

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 10/1999)

பிரிவு — பொருளடக்கம்


**அத்தியாயம் I**

**முன்னுரை**

1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.

**அத்தியாயம் II**

**தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல்**

3. நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான அதிகாரம்.
4. கையகப்படுத்தப்பட்ட நிலம் எவ்வித வில்லங்கங்களுமின்றி அரசிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.
5. கையகப்படுத்தப்பட்ட நிலத்தைப் பயன்படுத்துதல்.

**அத்தியாயம் III**

**தொகையைத் தீர்மானித்தலும் வழங்குதலும்**

6. தொகையைப் பெறுவதற்கான உரிமை.
7. தொகையைத் தீர்மானிப்பதற்கான உரிமை.
8. நீதிமன்றத்திற்குக் குறித்தனுப்புதல்.
9. தொகையைப் பிரித்தளித்தல்.
10. தொகையைச் செலுத்துதல்.
11. நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகையை முதலீடு செய்தல்.

12. வட்டி செலுத்துதல்.

## அத்தியாயம் IV

## பல்வகை

13. நுழைவதற்கான அதிகாரம்.

14. அறிவிப்புகள் முதலியவற்றைச் சார்வு செய்தல்.

15. பொது அறிவிப்புகள் தெரியும்படி செய்தல்.

16. அறிவிப்புகள் முதலியவற்றில் நியாயமான நேரம் குறித்தல்.

17. தடைக்கான தண்டனை.

18. உரிமையியல் வழக்கு நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்குத் தடை.

19. மாவட்ட ஆட்சியர் முதலானோர் பொது ஊழியர்களாக இருப்பர்.

20. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

21. நிலம் கையகப்படுத்துல் சட்டம் பொருந்தாது.

22. இந்தச் சட்டம் பிற சட்டங்களுக்கு மேலோங்கி இருத்தல்.

23. முடிவுறா நிலையிலுள்ள குறிப்பிட்ட சில கையகப்படுத்துகின்ற நிகழ்வுகளுக்கு இந்தச் சட்டம் பொருந்துதல்.

23A. அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.

24. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

25. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

26. சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்பட வேண்டிய விதிகள், அறிக்கைகள் மற்றும் ஆணைகள்.

# 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டம்
# தமிழ்நாடு சட்ட எண் 10/1999

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 1999ஆம் ஆண்டு மே திங்கள் 21ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**தமிழ்நாடு மாநிலத்தில் தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.**

தமிழ்நாடு மாநிலத்தில் தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலங்களை விரைந்து கையகப்படுத்துவதற்கும் அது தொடர்பான விவரங்களுக்கும் தனி வகைமுறைகளைச் செய்வது உகந்ததாக இருப்பதால்;

இந்தியக் குடியரசின் நாற்பத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

## அத்தியாயம் I
## முன்னுரை

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.–** (1) இந்தச் சட்டம், 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டம் என வழங்கப்படும்,

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அறிவிக்கையின் மூலம், அரசு குறிப்பிடக்கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்.–** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "ஆட்சியர்" என்பது, ஒரு மாவட்ட ஆட்சியர் எனப் பொருள்படும்; மேலும் இந்தச் சட்டத்தின்கீழ் ஆட்சியரின் செயற்பணிகளைப் புரிந்து வருவதற்கு என்று அரசினால் குறிப்பாக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் எவரையும் உள்ளடக்கும்;

(b) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(c) "தொழிலியற்பகுதி" என்பது, எந்த ஒரு பகுதி தொழிலியற் பகுதி என்று, அறிவிக்கை ஒன்றின் வாயிலாக அரசினால் விளம்பப்படுகின்றதோ அந்தப் பகுதி எதுவும் எனப் பொருள்படும்;

(d) "தொழிலியற்பேட்டை" என்பது, அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனை எதிலும் தொழிற்சாலைகளையும் பிற கட்டடங்களையும் அரசு கட்டி முடிக்கும் நிலையில், தொழில்துறை எதற்கும் அவை கிடைக்கத்தக்கனவாய்ச் செய்திருக்கிறதோ, அந்த மனை எதுவும் எனப் பொருள்படும்;

(e) "தொழிலியற் துறை நோக்கம்" என்பது, புதியதொரு தொழில்துறையைத் தொடங்குவதை, தற்போதிருக்கின்ற தொழில்துறை ஒன்றை விரிவுபடுத்துவதை, தொழிலியற்பகுதி ஒன்று வளர்ச்சியடையச் செய்வதை மற்றும் தொழிற் பேட்டையொன்றை நிறுவியமைத்து நிருவகித்து வருவதை உள்ளடக்கும்;

(f) "நிலம்" என்பது, நிலத்திலிருந்து கிடைக்கின்ற நலன்களையும், தரையுடன் இணைந்துள்ள அல்லது தரையுடன் இணைந்துள்ள எதனோடும் நிரந்தரமாகப் பிணைக்கப்பட்டுள்ள பொருள்களையும் உள்ளடக்கும்;

(g) "உரிமையாளர்" என்பது, தமக்கே உரிய வகையில் அல்லது தம் சார்பாகவும் மற்றவர் சார்பாகவும் அல்லது ஒரு முகவராக, பொறுப்பாட்சியராக, நிறைவேற்றுபவராக, நிருவாகியாக, செயலாட்சியராக, அல்லது பாதுகாப்பாளராக வாடகையைப் பெறுவதற்கு உரிமை உடையவராக இருக்கின்ற அல்லது நிலமோ கட்டடமோ வாடகைக்கு இருக்கின்ற ஒருவருக்கு வாடகைக்கு விடப்படுமானால் அந்த வாடகையை பெறக்கூடிய அல்லது அந்த வாடகையைப் பெறுவதற்கு உரிமையுடையவராக இருக்கக்கூடிய நபர் எவரையும் உள்ளடக்கும்;

(h) நிலம் எதன் தொடர்பாகவும், "சட்டப்படியான அக்கறை கொண்ட நபர்" என்பது, இந்தச் சட்டத்தின்கீழ் நிலத்தைக் கையகப்படுத்தியதற்காகச் செலுத்தப்படத்தக்க தொகைக்கு உரிமை கோருகின்ற அல்லது உரிமை கோரத் தகுதியுடையவராக இருக்கின்ற அனைத்து நபர்களையும் உள்ளடக்கும்; நபர் ஒருவர் நிலத்தைப் பாதிக்கின்ற வசதியுரிமை ஒன்றில் சட்டப்படி அக்கறை கொண்டவராக இருப்பாரானால், அவர் அந்த நிலத்தில் சட்டப்படி அக்கறை கொண்டவராக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் – II

## தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல்

**3. நிலத்தைக் கையப்படுத்துவதற்கான அதிகாரம்.–** (1) தொழிலியல் துறைக்கான நோக்கம் எதற்காகவும்

அல்லது இந்தச் சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகின்ற பிற நோக்கம் எதற்காகவும் நிலம் எதுவும் தேவைப்படுகிறது என்று எந்தச் சமயத்திலும் அரசு கருதுமாயின், அது, எந்த நோக்கத்திற்காக நிலம் தேவைப்படுகிறது என்பதைக் குறித்துரைத்து அறிவிப்பு ஒன்றைத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதன் மூலம் அத்தகைய நிலத்தைக் கையகப்படுத்தலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதற்கு முன்னர், அரசு, உரிமையாளரையும், அத்தகைய நிலத்தில் சட்டப்படி அக்கறை கொண்டவராயிருக்கக்கூடும் எனத் தாம் கருதுகின்ற பிற நபர் எவரையும், அந்த அறிவிப்பில் குறித்துரைக்கப்படும் காலஅளவுக்குள் அந்த நிலம் ஏன் கையப்படுத்தப்படக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு கோருதல் வேண்டும். அரசு, வகுத்துரைக்கப்படும் முறையில் பொது அறிவிப்பு ஒன்று கொடுக்கப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

(3) அரசானது, உரிமையாளராலும் அக்கறை கொண்டுள்ள நபராலும் காட்டப்பட்ட காரணம் ஏதேனும் இருந்தால், அதனை விசாரணை செய்து பரிசீலனை செய்த பின்னர் உட்பிரிவு (1)இன்படி ஆணை ஒன்றைப் பிறப்பிக்கலாம்.

**4. கையகப்படுத்தப்பட்ட நிலம், எவ்வித வில்லங்கங்களுமின்றி அரசிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.–** (1) பிரிவு 3இன் உட்பிரிவு (1)இன்படி அறிவிப்பு ஒன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டிருக்கின்றபோது, எந்த நிலத்திற்கு அந்த அறிவிப்பு தொடர்புடையதாய் இருக்கிறதோ அந்த நிலம் அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் எந்தவித வில்லங்கங்களுமின்றி அரசிடம் முழுமையாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** அரசினாலோ அதன் சார்பாகவோ அத்தகைய நிலம் கையகப்படுவதற்கு முன்னர், அந்த நிலமானது இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக இனி தேவைப்படாது என்று அரசுக்குத் தோன்றுமாயின், அது, தமிழ்நாடு அரசிதழில் அறிவிப்பை வெளியிடுவதன் மூலம், கையகப்படுத்தப்படுவதிலிருந்து அந்த நிலத்தை விடுவிக்கலாம். அத்தகைய அறிவிப்பு வெளியிடப்படுவதன் பேரில், அந்நிலமானது பிரிவு 3இன் உட்பிரிவு (1)இன்படியான ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டதன் பேரில், எந்த நபரிடமிருந்து உரிமை நீக்கம் செய்யப்பட்டிருந்ததோ அந்த நபருக்கே, அந்தக் காலகட்டத்தில் இருக்கக்கூடிய வில்லங்கங்கள் எவையேனும் இருப்பின், அவற்றுக்கு உட்பட்டு பின்நோக்கிய விளைவுகளுடன் உரியதாகிவிடுதல் வேண்டும்.

**மேலும் வரம்புரை:** உரிமையாளரும் அக்கறை கொண்ட பிற நபர்களும் கையகப்படுத்தல் நடவடிக்கைகளின் விளைவாக அவர்கள் அடைந்த சேதம் ஏதேனும் இருப்பின் அதற்காக பிரிவு 7இன் வகைமுறைகளுக்கு இணங்க தீர்மானிக்கப்பட்ட தொகையைப் பெறுவதற்கு உரிமை உடையவராகுதல் வேண்டும்.

(2) நிலம் எதுவும், உட்பிரிவு (1)இன்படி அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறபோது, அரசு ஆணையின் மூலம், அந்த நிலத்தின் உடைமை கொண்டிருக்கக்கூடிய நபர் எவரையும், அந்த ஆணை சார்வு செய்யப்பட்ட முப்பது நாட்களுக்குள்ளாக ஆட்சியரிடமோ இதன் பொருட்டு அவரால் அதிகாரமளிக்கப்படும் நபரிடமோ அதன் உடைமையைத் திருப்பி அளிக்குமாறு அல்லது ஒப்படைக்குமாறு பணிக்கலாம்.

(3) நபர் எவரும் உட்பிரிவு (2)இன்படியான ஆணை ஒன்றுக்கு இணங்கி நடக்க மறுப்பாரானால் அல்லது தவறுவாரானால் ஆட்சியர், அந்த நிலத்தை உடைமையில் எடுத்துக் கொள்ளலாம் என்பதோடு அந்த நோக்கத்திற்காகத் தேவையாக இருக்கக்கூடிய ஆற்றலைப் பயன்படுத்தலாம்.

**5. கையகப்படுத்தப்பட்ட நிலத்தைப் பயன்படுத்துதல்.–** இந்தச் சட்டத்தின்கீழ் நிலம் எதுவும் கையகப்படுத்தப்பட்டிருக்கின்ற நிலையில், இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக அத்தகைய நிலத்தை அரசு பயன்படுத்திக்கொள்ளலாம் அல்லது பயன்படுத்திக் கொள்ளச் செய்யலாம்.

## அத்தியாயம்–III

## தொகையைத் தீர்மானித்தலும் வழங்குதலும்

**6. தொகையைப் பெறுவதற்கான உரிமை.–** உரிமையாளர் அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தல் நிலம் எதிலும் அக்கறை கொண்ட நபர் ஒவ்வொருவரும், இதன் பின்பு வகைசெய்யப்பட்ட தொகை ஒன்றைப் பெறுவதற்கும் வழங்கப்படுவதற்கும் உரிமையுடையவராகுதல் வேண்டும்.

**7. தொகையைத் தீர்மானித்தல்.–** (1) நிலம் எதுவும் இந்தச் சட்டத்தின்கீழ் அரசினால் கையகப்படுத்தும்போது, இந்தப் பிரிவின் வகைமுறைகளுக்கு இணங்க தீர்மானிக்கப்பட வேண்டிய தொகை ஒன்றை அவ்வாறு கையகப்படுத்தியதற்காக அரசு வழங்குதல் வேண்டும்.

(2) அத்தொகையானது அரசுக்கும் நபர், எவருக்குமிடையேயான ஒப்பந்தத்தின் மூலம் எவருக்கு அது செலுத்தப்படத்தக்கதாக இருக்கின்றது எனத் தீர்மானிக்கப்படும்போது, அத்தகைய ஒப்பந்தத்திற்கு இணங்க அது வழங்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய உடன்பாடு எதுவும் எட்டப்படாத நிலையில், அரசு, அத்தகைய கையகப்படுத்தலுக்காக செலுத்தப்பட வேண்டிய தொகையையும், நபர் அல்லது நபர்கள் எவருக்கு அது செலுத்தப்பட வேண்டும் என்பதையும் தீர்மானிப்பதற்காக ஆட்சியருக்கு குறித்தனுப்புதல் வேண்டும்:

**வரம்புரை:** பொது ஆணையின் மூலம் அரசு குறித்துரைக்கக்கூடிய அத்தகைய தொகைக்கு மேற்படுகின்றதும், அவ்வாறு கையகப்படுத்தியதற்காகச் செலுத்தப்படவேண்டியதுமான தொகை எதுவும், அரசின் அல்லது இதன்பொருட்டு அரசு நியமிக்கக்கூடிய அலுவலரின் முன் ஒப்புதல் இன்றி ஆட்சியரால் தீர்மானிக்கப்படுதல் கூடாது.

(4) உட்பிரிவு (3)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், அந்த உட்பிரிவின்படி ஆட்சியரிடம் அந்த நிகழ்வைக் குறித்தனுப்பிய பின்னர், ஆனால் அறுதியாக அத்தொகையை அவர் தீர்மானிப்பதற்கு முன்னர் அத்தொகையானது அரசுக்கும் நபர் எவருக்குமிடையேயான ஒப்பந்தத்தின் மூலம் எவருக்கு அது செலுத்தப்படத்தக்கதாக இருக்கின்றது என தீர்மானிக்கப்படுமானால் அத்தகைய ஒப்பந்தத்திற்கு இணங்க, அத்தகைய தொகையானது ஆட்சியரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) அந்தத் தொகையை அறுதியாகத் தீர்மானிப்பதற்கு முன்னர் ஆட்சியர், அத்தொகையானது செலுத்தப்பட வேண்டிய நபர் ஒவ்வொருவருக்கும் அத்தொகை குறித்து அவரது தரப்பை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(6) அத்தொகையை தீர்மானிப்பதில், ஆட்சியர், 1894ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் (மையச் சட்டம் 1/1894) 23 மற்றும் 24ஆம் பிரிவுகளில் அடங்கியுள்ள வகைமுறைகளையும் தொடர்புடைய பிற வகைமுறைகளையும்.–

(a) மேற்சொன்ன பிரிவு 23, பிரிவு 4 இன் உட்பிரிவு (1)இன் படியான அறிவிக்கை தேதியை குறிப்பிடுகின்ற மற்றும் பிரிவு 6இன் படியான விளம்புகை வெளியிடப்படும் காலத்தை குறிப்பிடுகின்ற குறிப்புகள், இந்தச் சட்டத்தின் பிரிவு 3இன் உட்பிரிவுகள் முறையே, (2) மற்றும் (1)இன் படியான அறிவிப்பு வெளியிடப்படும் தேதியைக் குறிப்பிட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

(b) மேற்சொன்ன 24ஆம் பிரிவில், பிரிவு 4இன் உட்பிரிவு (1)இன் படியான அறிவிக்கை வெளியிடப்படும் தேதியைக் குறிப்பிடுகின்ற மற்றும் பிரிவு 6 இன் படியான விளம்புகை வெளியிடப்படும் தேதியைக் குறிப்பிடுகின்ற குறிப்புக்கள், இந்தச் சட்டத்தின் பிரிவு 3இன் உட்பிரிவுகள், முறையே (2) மற்றும் (1)இன் படியான அறிவிப்பு வெளியிடப்படும் தேதியைக் குறிப்பிட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும் என்ற மாற்றங்களுக்கு உட்பட்டு வழிகாட்டுதல்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) தொகையைத் தீர்மானிக்கின்ற நோக்கத்திற்காக,–

(a) ஆட்சியர் நபர் எவரையும், அவர் தேவை எனக் கருதுகிற, விவர அறிக்கைகளையும் மதிப்பீடுகளையும் அவரிடம் ஒப்படைக்குமாறு கோருவதற்கு அதிகாரம் பெற்றிருப்பார்.

(b) ஆட்சியர், நிலத்தில் அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிய வருகிற அல்லது நம்பப்படுகிற நபர் எவரையும் நடைமுறையில் இயன்றவரை கூட்டு உரிமையாளராக, அடைமானதாரராக, குத்தகைதாரராக அல்லது பிறவாறாக அந்நிலத்தில் அக்கறை கொண்டுள்ள பிற நபர் ஒவ்வொருவரின் பெயரையும், அத்தகைய அக்கறையின் இயல்பு மற்றும் அதன்பொருட்டு இந்த விவரவுரையின் தேதிக்கு முந்தைய மூன்றாண்டுகளில் பெறப்பட்ட அல்லது பெறத்தக்க வாடகைகள், வருமானங்கள் ஏதேனும் இருப்பின் அவை அடங்கியுள்ள விவரவுரையினையும் தம்மிடம் அளிக்குமாறு கோருகிற அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(8) உட்பிரிவு (7)இன்படி விவரஅறிக்கை, மதிப்பீடு அல்லது விவரவுரை ஒன்றினைக் கொடுக்குமாறு கோரப்படுகிற நபர் ஒவ்வொருவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்பு சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) 175 மற்றும் 176ஆம் பிரிவின் பொருள் வரையறைக்குள் அவ்வாறு செய்யக் கடமைப்பட்டவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(9) ஆட்சியர், குறிப்பிட்ட நிகழ்வு எதிலும் வல்லுநர்களைச் சாட்சியாக விசாரித்து அறிவது தேவையானதாக இருக்குமானால் அவ்வாறு செய்யலாம்.

(10) ஆட்சியரோ அல்லது இது குறித்து அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவருமோ, அவர் முன்பு உள்ள நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ள நிலம் எதிலும் நுழைவதற்கும் ஆய்வு செய்வதற்கும் உரிமைத் தகுதி உடையவராய் இருத்தல் வேண்டும்.

(11) ஆட்சியர், உட்பிரிவு (3)இன்படி தொகையைத் தீர்மானிப்பதற்காக அவருக்குக் குறித்தனுப்பப்பட்டுள்ள ஒவ்வொரு வழக்கிலும் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாகவும் மற்றும்

எந்த நிகழ்விலும் [1][அத்தகைய குறித்தனுப்பப்பட்ட தேதிக்கு ஆறு மாதத்திற்குள்ளாகவும்] முடிவு செய்தல் வேண்டும்.

(12) உட்பிரிவு (3)இன்படி ஆட்சியர் எவருக்கும் வழக்கு எதுவும் குறித்தனுப்பப்பட்டிருக்கும்போது, எந்த நிலையிலும் அரசானது, பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, எழுத்து வடிவிலான ஆணையின்படி, பிற அலுவலர் எவருக்கும் அதனை மாற்றியனுப்பலாம்; அத்தகைய மாற்றத்தின் பேரில் அந்த ஆணையில் தனிப்பட்ட பணிப்புரைகள் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அந்த வழக்கானது எந்த அலுவலருக்கு மாற்றப்பட்டதோ அந்த அலுவலர், அவ்வழக்கினை அது மாற்றப்பட்டபோது எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலையிலிருந்து விசாரணை செய்தோ அல்லது புதிதாக விசாரணை செய்தோ முடிவு செய்யலாம்.

**8. நீதிமன்றத்திற்குக் குறித்தனுப்புதல்.–** (1) தொகையைத் தீர்மானிப்பதில் ஆட்சியரின் அல்லது அவ்வழக்கானது எந்த அலுவலருக்கு மாற்றம் செய்யப்பட்டதோ அந்த அலுவலரின் தீர்வுமுடிவினால் பாதிக்கப்பட்ட நபர் எவரும், அத்தகைய முடிவுத் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக ஆட்சியருக்கோ அல்லது எந்த அலுவலருக்கு அந்த வழக்கானது மாற்றம் செய்யப்பட்டதோ அந்த அலுவலருக்கோ விண்ணப்பம் ஒன்றின் வாயிலாக, அது அவரை எந்த அளவிற்குப் பாதிக்கிறதோ அந்த அளவிற்கு, 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறு, நீதிமன்றத்தின் தீர்மானத்திற்காக அவரால் அந்த விவரம்

1. 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 2/2000) 2ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்கப்பட்டது.

குறித்தனுப்பப்படலாம்; மற்றும் அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுகிற போது, மேற்சொன்ன சட்டத்தின் IIIஆம் பகுதியின் வகைமுறைகள், அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு வேண்டிய மாறுதல்களுக்குப்பொருந்தும்.

(2) அத்தகைய குறிப்பாணையின் பேரிலான நீதிமன்றத்தின் தீர்வுமுடிவுகளும் மற்றும் அத்தகைய தீர்விற்கு உட்பட்டு தொகையைத் தீர்மானிக்கின்ற ஆட்சியரின் முடிவும் இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

**9. தொகையைப் பிரித்தளித்தல்.–** (1) தீர்மானிக்கப்பட்ட தொகையில் பல நபர்கள் அக்கறை கொண்டுள்ளதாகக் கோரும்போது, ஆட்சியர் அவர் தம் கருத்தில் அத்தகைய தொகையைப் பெறுவதற்கு உரிமைத்தகுதியுடைய நபர்கள் எவர் என்பதையும் அவர்களுள் ஒவ்வொருவருக்கும் சேரவேண்டிய, செலுத்தப்பட வேண்டிய தொகையையும் தீர்மானித்தல் வேண்டும்.

(2) பிரிவு 7இன்படி தீர்மானிக்கப்பட்ட தொகையிலோ, அதனைப் பிரித்தளிப்பதிலோ அல்லது அதன் பகுதி எதனையும் பிரித்தளிப்பதிலோ அல்லது அந்தத் தொகை அல்லது அதன் பகுதி எதனையும் எந்த நபர்களுக்கு வழங்க வேண்டும் என்பதிலோ பிரச்சனை எழுமானால், ஆட்சியர் அத்தகைய பிரச்சினையை நீதிமன்றத்தின் தீர்வுமுடிவிற்குக் குறித்தனுப்பலாம்.

**10. தொகையைச் செலுத்துதல்.–** (1) தொகையானது உடன்பாட்டின் பேரில் தீர்மானிக்கப்பட்டுள்ளபோது, அரசானது அத்தகைய தொகையை அதற்கு உரிமையுடைய நபருக்கு அல்லது நபர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) தொகையானது ஆட்சியராலோ அல்லது பிரிவு 7இன் வகைமுறைகளின்படி வேறு அலுவலர் எவராலுமோ

தீர்மானிக்கப்பட்டுள்ளபோது, அரசானது அத்தகைய தீர்மானத்திற்கு இணங்கிய வகையில் அந்தத் தொகைக்கு உரிமையுடைய நபர்களுக்கு அதனை வழங்க முற்படுதல் வேண்டும்; மற்றும் உட்பிரிவு (3)இல் சொல்லப்பட்ட ஒருசில அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளால் தடுக்கப்பட்டாலன்றி, அவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

(3) ஆட்சியரின் முடிவிற்கு இணங்கிய வகையில் தொகைக்கு உரிமையுள்ள நபர்கள், அதனைப் பெறுவதற்கு ஒப்புதல் அளிக்கவில்லையெனில் அல்லது அந்த நிலத்தினை உரிமைமாற்றம் செய்வதற்குத் தகுதியுள்ள நபர்கள் எவரும் இல்லையெனில் அல்லது அத்தொகையைப் பெறுவதற்கு உள்ள உரிமை குறித்து பூசல்கள் எவையேனும் இருந்தால், அரசானது அவ்வாறு தீர்மானிக்கப்பட்டத் தொகையினை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தல் வேண்டும்:

**வரம்புரை:** உரிமை உடையவராக ஒப்புக்கொண்ட நபர் எவரும், அத்தகைய தொகையின் போதாமை குறித்த தனது எதிர்ப்புடன் தொகையினைப் பெற்றுக் கொள்ளலாம்:

**மேலும் வரம்புரை:** இதில் அடங்கியுள்ள எதுவும், இந்த அத்தியாயத்தின்படி தீர்மானிக்கப்பட்டத் தொகை முழுவதையுமோ அல்லது பகுதி எதனையுமோ பெறக்கூடிய நபர் எவரையும் அதற்குச் சட்டப்படி உரிமையுடைய நபருக்குச் செலுத்துவதற்கான கடமையைப் பாதித்தல் கூடாது.

**11. நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகையை முதலீடு செய்தல்.–** பிரிவு 10இன் உட்பிரிவு (3)இன்படி நீதிமன்றத்தில் தொகை எதுவும் வைப்பீடு செய்யப்பட்டுள்ளபோது, நீதிமன்றமானது தாமாக முற்பட்டோ அல்லது அத்தகைய தொகையில் அக்கறை கொண்டுள்ள அல்லது அக்கறை கொண்டுள்ளதாகக்

கோருகிற தரப்பினர் எவராலுமோ அல்லது அவர் சார்பாக செய்யப்பட்ட விண்ணப்பத்தின்பேரிலோ, அந்தத் தொகையை அது தக்கது என நினைக்கிற அத்தகைய அரசு அல்லது அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிற கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டும் என ஆணையிடலாம்; மற்றும் எந்த நிலத்தைப் பொறுத்து அத்தகைய தொகை வைப்பீடு செய்யப்பட்டிருக்கின்றதோ அல்லது அந்தத் தொகைக்குக் கிட்டத்தட்ட சமமாக இருக்கக்கூடிய தொகை வைப்பீடு செய்யப்பட்டிருக்கின்றதோ, அந்த நிலத்திலிருந்து அவர்கள் பெற்றிருக்கக் கூடிய அதே நலனை அதில் சட்டப்படி அக்கறை கொண்டுள்ள தரப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டும் எனத் தான் கருதுகிற முறையில் அத்தகைய முதலீடு ஏதொன்றின் வட்டியையோ பிற வருமானங்களையோ சேர்த்து வைத்து செலுத்த வேண்டும் எனப் பணிக்கலாம்.

**12. வட்டி செலுத்துதல்.–** நிலத்தைக் கையகப்படுத்தும் போது அல்லது அதற்கு முன்பு தொகை எதுவும் செலுத்தப்படவில்லை அல்லது வைப்பீடு செய்யப்படவில்லை என்றால், அரசு, கையகப்படுத்தப்பட்ட காலஅளவிலிருந்து, அத்தொகை செலுத்தப்படும் வரை அல்லது வைப்பீடு செய்யப்படும் வரையில் ஆண்டுக்கு [1][ஒன்பது சதவீதம்] என்னும் வட்டியுடன் கூடிய தீர்மானம் செய்யப்பட்ட தொகையை செலுத்துதல் வேண்டும்.

1. 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண்.2/2000)3ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்கப்பட்டது.

## அத்தியாயம் IV

## பல்வகை

**13. நுழைவதற்கான அதிகாரம்.–** பொது அல்லது தனித்து அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அரசு அலுவலர் மற்றும் நபர் எவரும், நிலம் அல்லது கட்டடம் எதிலும் உதவியாளர்களுடன் அல்லது பணியாளர்களுடன் அல்லது உதவியாளர்கள் இல்லாமலும், பணியாளர்கள் இல்லாமலும் பின்வரும் நோக்கத்திற்காக நுழையலாம் அல்லது உள்ளே செல்லலாம்,–

(a) ஆய்வு செய்தல், நிலஅளவை, அளவு மதிப்பீடு அல்லது விசாரணை மற்றும் அந்த நிலம் அல்லது கட்டடங்களின் நிலஅளவுகளை எடுத்தல்;

(b) கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தல் மற்றும் வடிகால் வழிகளை அறிதல்;

(c) மண்ணுக்கடியில் தோண்டுதல் அல்லது குழாய்க்குத் துளைகள் அமைத்தல்;

(d) குழிகளைத் தோண்டுதல் மற்றும் குறியீடுகளை அமைத்து எல்லைகளையும் மற்றும் கோடுகளையும் அமைத்தல்;

(e) இந்தச் சட்டத்தின் சிறப்பான நிருவாகத்திற்காகத் தேவைப்படும் ஏதேனும் பிறவற்றைச் செய்தல்:

**வரம்புரை:**

(i) சூரிய உதயம் மற்றும் மறைவு ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலஅளவைத் தவிர, உடைமைதாரர் அல்லது உடைமைதாரர் இல்லாதிருந்தால் நிலம் அல்லது கட்டடத்தில் உரிமையாளருக்கு

நியாயமான அறிவிப்பு ஏதுமின்றி நுழைதல் என்பது கூடாது;

(ii) ஒவ்வொரு முறையும் அந்த நிலம் மற்றும் கட்டடத்தில் பெண்கள் (எவரேனும் இருப்பின்) அவர்கள் வெளியேறுவதற்குத் தேவையான அவகாசம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(iii) கைப்பற்றப்பட்ட அவசர நோக்கத்தைப் பொறுத்த அளவில், உள்நுழையப்பட்ட நிலம் அல்லது கட்டடம் உடைமைதாரரின் சமூக மற்றும் சமயப் பயன்பாட்டிற்காக இருந்தால் அதனை எப்பொழுதும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**14. அறிவிப்புகள் முதலியவற்றைச் சார்பு செய்தல்.–** (1) இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி எதனாலும் கோரப்படும் அறிவிப்புகள், ஆணைகள் மற்றும் பிற ஆவணங்கள் அனைத்தும், இந்தச் சட்டத்தில் அல்லது விதியில் வேறுவிதமாக வகைசெய்யப்படாலன்றி நபர் எவருக்கும் பின்வரும் நிகழ்வுகளில் சார்வு செய்யப்படுதல் வேண்டும் அல்லது உரிய முறையில் சார்வு செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்:–

(a) சார்வு செய்யப்படவேண்டிய நபர் ஒரு நிறுமமாக இருக்கும் போது, 1956ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (மையச் சட்டம் 1/1956) 51ஆம் பிரிவின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் சார்வு செய்யப்பட்டுப் பணி முடிக்கப்பட்டிருத்தல்;

(b) சார்வு செய்யப்பட வேண்டிய நபர் ஒரு நிறுவகமாக இருக்கும் போது, அதன் அலுவல் தலைமை

அலுவலகத்திற்கு அந்த ஆவணமானது முகவரியிடப்பட்டிருக்கிறதெனில், –

(i) அஞ்சல் அனுப்புகைச் சான்றிதழின் கீழ் அல்லது பதிவுத் தபாலின் மூலம் அது அனுப்பப்பட்டிருந்தால்; அல்லது

(ii) மேற்சொன்ன அலுவல் இடத்தில் அது வைக்கப்பட்டிருந்தால்;

அதன் அலுவல் எந்தப் பெயரின் அல்லது பாணியில் நடத்தப்படுகிறதோ, அந்தப் பெயரின் அல்லது பாணியை அடையாளங்காணப்பட்டிருந்தால்;

(c) சார்வு செய்யப்பட வேண்டிய நபர் சட்டப்படியான பொது அமைப்பு அல்லது ஒரு கழகம் அல்லது ஒரு சங்கம் அல்லது பிற அமைப்பாக இருக்கும்போது, அந்த அமைப்பின், கழகத்தின் அல்லது சங்கத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள அதன் செயலாளர், பொருளாளர் அல்லது பிற தலைமை அலுவலருக்கு ஆவணமானது முகவரியிடப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறதெனில்,–

(i) அஞ்சல் அனுப்புகைச் சான்றிதழின்கீழ் அல்லது பதிவுத் தபாலில் அது அனுப்பபட்டிருந்தால்; அல்லது

(ii) அந்த அலுவலகத்தில் அது வைக்கப்பட்டிருந்தால்.

(d) ஏனைய பிற நிகழ்வில் சார்வு செய்யப்பட வேண்டிய நபருக்கு ஆவணமானது முகவரியிடப்பட்டு அனுப்பபட்டிருந்தால்; மற்றும்

(i) அவருக்குக் கொடுக்கப்பட்டு அல்லது வழங்கப்பட்டிருந்தால்; அல்லது

(ii) அந்த நபர் காணப்படவில்லை என்றால், கடைசியாக அறியப்பட்ட குடியிருப்பு அல்லது அலுவல் இடத்தில் எடுப்பாகத் தெரியும் படியான பகுதியில் ஒட்டப்பட்டு அல்லது அவரது குடும்பத்தில் உரிய வயது அடைந்த நபரிடம் கொடுக்கப்பட்டு அல்லது வழங்கப்பட்டு அல்லது நிலம் அல்லது அதைச் சார்ந்த கட்டடத்தில் தெரியும்படியான ஏதேனும் பகுதியில் ஒட்டப்பட்டுஇருந்தால்; அல்லது

(iii) அந்த நபருக்கு, அஞ்சல் அனுப்புகைச் சான்றிதழின்கீழ் அல்லது பதிவுத் தபாலில் அது அனுப்பப்பட்டிருந்தால்.

(2) ஏதேனும் நிலம் அல்லது கட்டடத்தில் உரிமையாளர் அல்லது உடைமைதாரருக்குத் தேவைப்படும் அல்லது அவர் மீது சார்பு செய்யப்பட அதிகாரமளிக்கப்பட்ட ஆவணமானது, மேற்கொண்டு பெயரோ அல்லது விவரமோ இல்லாமல் அந்த நிலத்தின் அல்லது கட்டடத்தில் (அந்த நிலம் அல்லது கட்டட பெயருடன்) நிகழ்விற்கேற்ப "உரிமையாளர்" மற்றும் "உடைமைதாரருக்கு" முகவரியிடப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும் மற்றும் உரிய முறையில் சார்வு செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(a) அவ்வாறு அனுப்பப்பட்ட ஆவணம் உட்பிரிவு (1)இன், (d)கூறின்படி அனுப்பப்பட்டிருந்தால் அல்லது கொடுக்கப்பட்டிருந்தால் ; அல்லது

(b) அவ்வாறு முகவரியிடப்பட்டு அனுப்பப்பட்ட அதன் நகலானது அல்லது முகவரியிடப்பட்ட ஆவணமானது நிலம் அல்லது கட்டடத்தில் உள்ள ஏதேனும் நபருக்கு அனுப்பப்பட்டிருந்தால் அல்லது கொடுக்கப்பட்டிருந்தால், கொடுக்கப்பட வேண்டிய நபர்

அந்த நிலத்தில் அல்லது கட்டடத்தில் இல்லையென்றால், அந்த நிலத்தின் அல்லது கட்டடத்தில் எடுப்பாகத் தெரியும்படியான ஏதேனும் பகுதியில் ஒட்டப்படுதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவிற்கு இணங்கிய வகையில் ஆவணமானது, நிறுவகத்தின் மீது சார்வு செய்யப்பட்டிருக்கும்போது, அந்த ஆவணமானது ஒவ்வொரு பங்குதாரருக்கும் சார்வு செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் சொத்தின் உரிமையாளரின் மீது ஏதேனும் ஆவணம் சார்வு செய்யப்படுவதற்கு ஏதுவாகச் சொத்து உடைமைதாரரிடம் (எவரேனும்இருந்தால்) அரசு எழுத்து வடிவிலான அறிவிப்பின் மூலமாக அதன் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரியைத் தெரிவிக்கும்படி கேட்கலாம்.

**15. பொது அறிவிப்புகள் தெரியும்படிச் செய்தல்.–** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விதியின்படி ஒவ்வொரு பொது அறிவிப்பும் சம்பந்தப்பட்ட அலுவலரின் கையொப்பத்துடன் இருத்தல் வேண்டும் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பகுதியில் பெருவாரியாகத் தெரிவிக்கப்படச் செய்திருத்தல் வேண்டும், மேற்சொன்ன பகுதிக்கு உள்ளிட்ட பொது இடங்களில் தெரியும்படியாக அதனின் நகல்கள் ஒட்டப்பட்டு அல்லது முரசு அறைவதன் மூலமாக அல்லது உள்ளூர்ச் செய்தித்தாள் ஒன்றில் விளம்பரம் செய்வதன் மூலமாக வெளியிடப்பட்டு அல்லது இதனின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழியில் மற்றும் அந்த அலுவலர் சரியெனக் கருதும் ஏதேனும் பிற வழியில் இருத்தல் வேண்டும்.

**16. அறிவிப்புகள் முதலியவற்றில் நியாயமான நேரம் குறித்தல்.–** ஏதேனும் அறிவிப்பு, ஆணை அல்லது பிற

ஆவணம் வெளியிடப்பட்டு அல்லது இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதியின் கீழ் ஏதேனும் செய்வதற்கு இந்தச் சட்டத்தின்படி அல்லது விதியில் காலஅளவு நிர்ணயிக்கப்படவில்லை என்றால், அதைச் செய்வதற்கு அல்லது நிறைவு செய்வதற்கு, ஒரு நியாயமான காலஅளவை அறிவிப்பு, ஆணை அல்லது பிற ஆவணத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**17. தடைக்கான தண்டனை.–** நிலம் அல்லது கட்டடம் எதிலும் நுழைவதற்கு அல்லது உள்ளே செல்வதற்கு, இந்தச் சட்டத்தின்படி அதிகாரமளிக்கப்பட்ட நபர் ஒருவர் நுழைவதைத் தடுக்கிற அல்லது அவ்வாறு நுழைவதற்குப் பின்பு அத்தகைய நபரைத் தொந்தரவு செய்கிற அல்லது இந்தச் சட்டத்தினாலோ அதன் வழியினாலோ வழங்கப்பட்டுள்ள அதிகாரம் எதுவும் சட்டப்படியாகச் செலுத்தப்படுவதைத் தடுக்கிற நபர் எவரும், அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில், ஆறு மாதம் வரையிலான காலஅளவிற்குச் சிறைத்தண்டனையோ ஆயிரம் ரூபாய் வரையிலான பணத்தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**18. உரிமையியல் வழக்கு நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குத் தடை.–** இந்தச் சட்டத்தில் வெளிப்படையாக வேறுவிதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, இந்தச் சட்டத்தின்படி அரசோ அல்லது மாவட்ட ஆட்சியரோ தீர்மானிப்பதற்கு அதிகாரமளிக்கப் பெற்ற விவரம் எதனையும் பொறுத்த அளவில் உரிமையியல் வழக்கு நீதிமன்றம் எதுவும் அதிகார வரம்பு பெற்றிருத்தல் கூடாது; மற்றும் இந்தச் சட்டத்தின் மூலம் அல்லது இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட அதிகாரம் எதனின் மூலம் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படக்கூடிய நடவடிக்கை எதனையும் பொறுத்த அளவில், நீதிமன்றம் எதனாலும் உறுத்துக் கட்டளை எதுவும் வழங்கப்படுதல் கூடாது.

**19. மாவட்ட ஆட்சியர் முதலானோர் பொது ஊழியர்களாக இருப்பர்.–** இந்தச் சட்டத்தின்படி செயற்பணிகளை செய்து வருவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் பிற நபர் எவரும், இந்தியத் தண்டனை தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவு 21இன்படி பொருள் வரையறைக்குள் பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**20. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.–** (1) இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதனை ஒட்டி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணையை ஒட்டியோ நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும், நபர் எவருக்கும் எதிராக உரிமையியல் வழக்கு, குற்றவியல் வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

(2) இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணையின் படியோ நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனாலும் விளைவிக்கப்பட்ட அல்லது விளைவிக்கப்படக்கூடிய சேதம் எதற்காகவும் அரசுக்கும் அல்லது மாவட்ட ஆட்சியருக்கும் அல்லது இந்தச் சட்டத்தின்படி அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் எவருக்கும் அல்லது அரசின் அல்லது ஆட்சியரின் சார்நிலை அதிகார அமைப்பிற்கும் அல்லது அலுவலருக்கும் எதிராக உரிமையியல் வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

**21. நிலம் கையகப்படுத்தல் சட்டம் பொருந்தாது.–** இந்தச் சட்டத்தில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, 1894ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் (மையச் சட்டம் I/1894)

வகைமுறைகள், பிரிவு 3இன் உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காகக் கோரப்படுகின்ற நிலம் எதற்கும் பொருந்துதல் முடிவுற்றுப் போதல் வேண்டும்; மற்றும் அத்தகைய நிலம் எதுவும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் மட்டுமே அரசினால் கையகப்படுத்தப்படுதல் வேண்டும்.

**22. இந்தச் சட்டம் பிற சட்டங்களுக்கு மேலோங்கி நிற்கும்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் அல்லது வழக்கம், வழக்காறு, ஒப்பந்தம் அல்லது நீதிமன்றம் ஒன்றின் அல்லது பிற அதிகாரஅமைப்பின் தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் முரணாக எதுவும் அடங்கியிருந்த போதிலும், செயல்விளைவு பெறுதல் வேண்டும்.

**23. முடிவுறா நிலையிலுள்ள குறிப்பிட்ட சில கையகப்படுத்துகின்ற நிகழ்வுகளுக்கு இந்தச் சட்டம் பொருந்துதல்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் யாவும் இதன் பின்பு இந்தப் பிரிவில் மேற்சொன்ன சட்டம் எனக் குறிப்பிடப்படும் 1894ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் (இதன் பின்பு கூறப்பட்ட சட்டத்தின் இந்தப் பிரிவில் குறிப்பிடப்படும்) படி

(i) மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 4இன் உட்பிரிவு (1)இன்படி அறிவிக்கை, பிறப்பிக்கப்பட்டிருப்பின்; அல்லது

(ii) மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 6இன்படி விளம்புகை செய்யப்பட்டிருப்பின்; அல்லது

(iii) மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 9இன் உட்பிரிவு (1)இன்படி அறிவிப்பு அளிக்கப்பட்டிருப்பின்;

இந்தச் சட்டத்தின் பிரிவு3 உட்பிரிவு (2)இன்படி, நிலத்தினைக் கையகப்படுத்துவதற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளபோதும், ஆனால், மேற்சொன்ன சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்னர் பொதுநோக்கம் எதற்காகவும் அல்லது தொழில் நோக்கத்திற்காகக் கருதப்பட்ட நிறுமம் ஒன்றிற்காக நிலம் எதனையும் கையகப்படுத்துவதற்கான மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 11இன்படி மாவட்ட ஆட்சியரால் தீர்ப்பு எதுவும் வழங்கப்படாமல் உள்ளபோதும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னர் தொடங்கப்பட்ட நிகழ்வு அல்லது நிகழ்வுகளுக்கும் கூடப் பொருந்துதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எதுவும், இந்தச் சட்டத்தின் பிரிவு 3இன் உட்பிரிவு (1)இல் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக நிலம் எதுவும் கோரப்படுகிறது என்பதற்கான அறிவிப்பு ஒன்றை தமிழ்நாடு அரசிதழில் அரசு வெளியிடும் வரையில் எந்தவொரு நிலம் தொடர்பாகவும் பொருந்துதல் கூடாது.

[1][23–A. **அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.–**

அரசானது, அறிவிக்கையின் மூலம்–

(1) [2][****]

(2) பிரிவு 4இன் உட்பிரிவு (1)இன் முதலாம் வரம்புரையின் படி நிலம் கையகப்படுத்துதலிருந்து திரும்பப் பெறுதல்;

(3) பிரிவு 25இன்படி விதிகளைச் செய்தல்,

ஆகிய அதிகாரங்களைத் தவிர, அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் கட்டுப்பாடுகள் ஏதும் இருந்தால், அவற்றிற்கு உட்பட்டு, இச்சட்டத்தின் படியான அதிகாரங்கள் அனைத்தும் ஆட்சியரால் செலுத்தப்பட வேண்டும் என பணிக்கலாம்.]

---

1. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண்.17/2005) 2ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.

2. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண்.21/2021) 2ஆம் பிரிவினால் விட்டுவிடப்பட்டது

**24. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதில் இடர்ப்பாடுகள் எதுவும் எழுமானால் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுகின்ற ஆணை ஒன்றின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத, அந்த இடர்ப்பாட்டினை அகற்றுவதற்கான நோக்கத்திற்காக அரசு தமக்குத் தேவையானது என்றோ அல்லது உகந்தது என்றோ தோன்றக் கூடிய வகைமுறைகளைச் செய்து கொள்ளலாம்.

**வரம்புரை:** இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்த பின்பு அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

**25. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது நோக்கங்களில் எதனையும் நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் முன்சென்ற அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு ஊறின்றியும் அத்தகைய விதிகள்;

(a) இந்தச் சட்டத்தினால் வகுத்துரைக்கப்பட வேண்டியவை என வெளிப்படையாகக் கோரப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட விவரங்கள் அனைத்திற்கும்; மற்றும்

(b) மாவட்ட ஆட்சியரின் ஆணைகள் மற்றும் பிற ஆவணங்களை சான்றுறுதி ஒப்பமிடுகின்ற முறைக்கும்

வகை செய்யலாம் அல்லது ஒழுங்குபடுத்தலாம்.

**26. சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்பட வேண்டிய விதிகள், அறிவிக்கைகள் மற்றும் ஆணைகள்.–** (1). (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள்

அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் குறிப்பிட்டதொரு நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு அவை வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், குறிப்பிட்டதொரு நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு அவை வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுதல் வேண்டும்; அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அத்தகைய விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை எதிலும் சட்டமன்றப் பேரவையானது மாற்றம் எதையும் செய்யுமானால் அல்லது அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை செய்யப்படுதல் கூடாது அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அதன்பின்பு அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே செயல்விளைவு பெறுதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப செயல்விளைவு பெறாது போதல் வேண்டும்; எனினும், அவ்வாறு செய்யப்பட்ட மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.